# இருமாதங்களில் ராணுவ பலத்தை அதிகரிக்க முயற்சி!

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 24 இதழ் 332
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 08 — 01 — 1993

(கொழும்பு) அடுத்த மார்ச் மாதத்திற்குள் இராணுவ பலத்தை அதிகரிக்கும் நடவடிக்கையில் அரசு ஈடுபட்டுள்ளதாக கொழும்பு பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது. பொலிஸ், கடற்படை, தரைப்படை ஆகியவற்றையும் உள்ளடக்கி 1,80,000 பேர் படைகளில் தற்போது இருக்கிறார்கள். மேலும் அடுத்த மார்ச் மாதத்திற்கு முன் 3,000 பேரை இராணுவத்தில் சேர்க்க அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. 1983ல் வடக்கு-கிழக்கில் யுத்தம் ஆரம்பமானபோது இராணுவத்தினரின் எண் (4-ம் பக்கம் பார்க்க)

## புக்காரா; ஹெலியின் உதவியுடன்
# வடக்கு கிழக்குபகுதிகளில் விரைவில் பாரிய தாக்குதல்

[கொழும்பு) புக்காரா விமானங்கள் மற்றும் எம். ஐ. 8 ரக ஹெலிகொப்டர்களின் உதவியுடன் வடக்கு கிழக்குப் பகுதிகளில் பாரிய தாக்குதல் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதாக கொழும்பு பத்திரிகையொன்று தகவல் வெளியிட்டுள்ளது. ஆர்ஜென்ரீனாவிடமிருந்து 28 கோடி அமெரிக்க டொலர்கள் செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 4 புக்காரா விமானங்கள் தற்பொழுது கொழும்பு வந்துசேர்ந்துள்ளன. 4-ம் பக்கம் பார்க்க)

# கிளாலி சம்பவம் இலங்கைக்கு புதிய சர்வதேசநெருக்கடிகளை ஏற்படுத்தும்?

(கொழும்பு)

கடந்த சனிக்கிழமை கிளாலி கடற்பகுதியில் அப்பாவி தமிழ் பயணிகள்மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் நடத்திய கண்மூடித்தனமான துப்பாக்கிப்பிரயோகம் இலங்கைக்கு சர்வதேச ரீதியில் ஒரு கரும்புள்ளியை ஏற்படுத்திவிடும் என்றும் இதன்காரணமாக ஸ்ரீலங்கா அரசு புதிய சர்வதேச நெருக்கடிகளை எதிர்கொள்ளவேண்டிய ஒரு இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுவிடும் என்றும் அரசியல் விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

கிளாலியில் இடம்பெற்ற சம்பவம் ஸ்ரீலங்கா அரசு எதிர்பார்த்ததையும்விட சர்வதேச கவனத்தை ஈர்க்கும் மனித உரிமைகள் இயக்கங்களின் அவதானத்துக்கும் சென்றுவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மனித உரிமை மீறல் விடயத்தில் ஸ்ரீலங்கா அரசு கிளாலி சம்பவத்தின் மூலம் சர்வதேச ரீதியில் ஒரு கரும்புள்ளியையே பெற்றுக்கொள்ளும். மனித உரிமைகள் இயக்கம் இந்த விடயத்தில் ஸ்ரீலங்கா அரசுக்கு பலவித நெருக்குதல்களையும் விரைவில் ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் குழு, நிதி வழங்கும் சர்வதேச ஸ்தாபனங்கள் மற்றும் நிதியுதவிகளை [4-ம் பக்கம் பார்க்க]

## பேச்சுவார்த்தை எதுவுமில்லை

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடன் லண்டனிலோ, பாரிசிலோ எந்த விதமான பேச்சுவார்த்தைகளும் மேற்கொள்ளவில்லை என்று அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பில்

## பட்டதாரி பயிலுனர் ஆசிரியர் 11ல் கடமைக்கு செல்வர்

## உலகில் இடம்பெறும் போரினால்
# 15 லட்சம் குழந்தைகள் பலி
## - யூனிசெப் அறிக்கை -

[லண்டன்] உலகில் பல்வேறு பகுதிகளிலும் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக நடைபெற்று வரும் யுத்தங்களினால் 15 லட்சம் குழந்தைகள் இறந்துள்ளதாக ஐ. நா. சிறுவர் பாதுகாப்பு நிதியம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: இந்தக்காலத்தில் இடம்பெற்ற யுத்தங்களினால் ஒ கோடி குழந்தைகள் உளரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். 40 லட்சம் குழந்தைகள் இடம்பெயர்ந்து அகதிகளாகியுள்ளனர். குறிக்கப்பட்ட பத்துவருடகாலத்தில் யுத்தத்தின் கொடூரம் உலகின் பல பாகங் (4-ம் பக்கம் பார்க்க)

## கொடிகாமத்தில் ஹெலி சூடு

(யாழ்ப்பாணம்

நேற்றுமாலை சுமார் பதினொரு மணியளவில் கொடி

# கிளாலியின் இரு மருங்கிலும் பயணிகள் தேக்கம்

(கொழும்பு) கிளாலி கடல் பாதையூடாக பயணம் செல்வதற்காக ஆயிரக்கணக்கான பயணிகள் கரையின் இருபகுதியிலும் பல நாட்களாக காத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (4-ம் பக்கம் பார்க்க)

## சித்தன்கேணி குண்டுவீச்சு:

# சர்வதேசநெருக்கடிகளை ஏற்படுத்தும்?

(கொழும்பு)

கடந்த சனிக்கிழமை கிளாலி கடற்பகுதியில் அப்பாவி தமிழ் பயணிகள்மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் நடத்திய கண்மூடித்தனமான துப்பாக்கிப்பிரயோகம் இலங்கைக்கு சர்வதேச ரீதியில் ஒரு கரும்புள்ளியை ஏற்படுத்திவிடும் என்றும் இதன்காரணமாக ஸ்ரீலங்கா அரசு புதிய சர்வதேச நெருக்கடிகளை எதிர்கொள்ளவேண்டிய ஒரு இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுவிடும் என்றும் அரசியல் விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

கிளாலியில் இடம்பெற்ற சம்பவம் ஸ்ரீலங்கா அரசு எதிர்பார்த்ததையும்விட சர்வதேச கவனத்திற்கும் மனித உரிமைகள் இயக்கங்களின் அவதானத்துக்கும் சென்றுவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது

மனித உரிமை மீறல் விடயத்தில் ஸ்ரீலங்கா அரசு கிளாலி சம்பவத்தின் மூலம் சர்வதேச ரீதியில் ஒரு கரும்புள்ளியையே பெற்றுக்கொள்ளும். மனித உரிமைகள் இயக்கம் இந்த விடயத்தில் ஸ்ரீலங்கா அரசுக்கு பலவித நெருக்குதல்களையும் விரைவில் ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் குழு, நிதி வழங்கும் சர்வதேச ஸ்தாபனங்கள் மற்றும் நிதியுதவிகளை

(4-ம் பக்கம் பார்க்க)

## பேச்சுவார்த்தை எதுவுமில்லை

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடன் லண்டனிலோ, பாரிசிலோ எந்தவிதமான பேச்சுவார்த்தைகளும் மேற்கொள்ளவில்லை என்று அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பில் நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்துள்ளார். - சு

## பட்டதாரி பயிலுனர் ஆசிரியர் 11ல் கடமைக்கு செல்வர்

(கொழும்பு)

அண்மையில் ஆசிரிய நியமனம் பெற்ற சகல பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களும் எதிர்வரும் 11-ம் திகதி திங்கட்கிழமை தமது கடமைகளை பொறுப்பேற்கவேண்டும் என கல்வியமைச்சு தெரிவித்துள்ளது

1992ம் ஆண்டில் பட்டதாரிப்பட்டம் பெற்ற 6,500 பட்டதாரிகளுக்கும் இம்மாதம் 30ம் திகதி நியமனக்கடிதங்கள் வழங்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இவர்களுக்கு கற்பித்தல் துறையில் குறுகிய காலபயிற்சி

(4ம் பக்கம் பார்க்க)

## வட-கிழக்கு அகதிகளுக்கு 17கோடி ரூபா உதவி

(கொழும்பு)

வடக்கு- கிழக்குப் பகுதிகளிலுள்ள தமிழ்அகதிகளின் புனர்வாழ்விற்கென 17 கோடியே 40 லட்சம் ரூபா அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலயத்திடம் வழங்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா, இத்தாலி, சுவீடன், சுவிஸ், பிரான்ஸ், நெதர்லாந்து, வத்திகான் ஆகிய நாடுகளே இந்நிதியை வழங்கியுள்ளன.

ஜப்பான், நோர்வே ஆகிய நாடுகள் அகதிகளுக்கான நிதியை சிறிலங்கா அரசிடம் வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. -ரி

## பொது எழுது வினைஞர்கள் இடமாற்றம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனவரி 01ந் திகதி தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்ட பொது எழுதுவினைஞர்கள், மற்றும் சமாந்தர சேவைகளிலுள்ள அலுவலர்களின் இடமாற்றம் இரண்டு மாதங்களுக்குப் பின் போடப்பட்டுள்ளதாக கொழும்பிலிருந்து யாழ். அரச அதிபர் வானொலிச் செய்திமூலம் அறிவித்துள்ளார்

மாகாணசபையின் பிரதம செயலாளரால் இவ்விடமாற்ற உத்தரவு வழங்கப்பட்ட போதும், குடாநாட்டு மக்கள் பிறமாவட்டங்களுக்குச் செல்வதில் ஏற்படக்கூடிய கஷ்டங்களைக் கருத்தில் கொண்டே இப் பின்போடல்

(4-ம் பக்கம் பார்க்க)

## இல. நிர்வாகசேவை பரீட்சையை யாழ்ப்பாணத்தில் வைக்குமாறு அரசுக்கு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கை நிர்வாக சேவைக்கான போட்டிப் பரீட்சைகளை யாழ்ப்பாணத்திலும் வைக்குமாறும் அவ்வாறு இல்லாதுவிடின் அப்பரீட்சைகளைப் பின் போடுமாறும் கோரும் செய்தியொன்று மேலதிக அரச அதிபர் திருமதி திலகநாயகம் போலினால் நேற்று பரீட்சை திணைக்களத்

(4 ம்பக்கம் பார்க்க)

## உலகில் இடம்பெறும் போரினால் 15 லட்சம் குழந்தைகள் பலி

### - யூனிசெப் அறிக்கை -

(லண்டன்)

உலகில் பல்வேறு பகுதிகளிலும் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக நடைபெற்று வரும் யுத்தங்களினால் 15 லட்சம் குழந்தைகள் இறந்துள்ளதாக ஐ. நா. சிறுவர் பாதுகாப்பு நிதியம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது: இந்தக்காலத்தில் இடம்பெற்ற யுத்தங்களினால் ஒ கோடி குழந்தைகள் உளரீயாகப் பாதிக்கப் பட்டுள்ளனர். 40 லட்சம் குழந்தைகள் இடம் பெயர்ந்து அகதிகளாகியுள்ளனர். குறிக்கப்பட்ட பத்துவருட காலத்தில் யுத்தத்தின் கொடூரம் உலகின் பல பாகங்

(4-ம் பக்கம் பார்க்க)

## கிளாலியின் இரு மருங்கிலும் பயணிகள் தேக்கம்

(கொழும்பு)

கிளாலி கடல் பாதையூடாக பயணம் செல்வதற்காக ஆயிரக்கணக்கான பயணிகள் கரையின் இருபகுதியிலும் பல நாட்களாக காத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

## கொடிகாமத்தில் ஹெலி சூடு

(யாழ்ப்பாணம்)

நேற்றுகாலை சுமார் பதினொரு மணியளவில் கொடிகாமம் பகுதியில் ஹெலிகொப்டர் ஒன்று துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டது.

இதனால் பீதியடைந்த மக்கள் பல திசைகளையும் நோக்கி சிதறி ஓடினார்கள்.

பாடசாலை மாணவர்கள் அச்சமடைந்து ஆசிரியர்களை நோக்கி ஓடினார்கள். 159 - இ

## சித்நன்கேணி குண்டுவீச்சு: நான்கு சடலங்கள் நேற்று அடையாளம் காணப்பட்டன

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினம் சித்தன்கேணியில் இடம்பெற்ற சுப்பசொனிக் தாக்குதலின்போது அடையாளம் காணப்படாமல் யாழ். வைத்தியசாலைப் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த நான்கு சடலங்களும் நேற்று அடையாளம்

(4-ம்பக்கம் பார்க்க)

## யாழ். குடாவின் உணவுப் பற்றுக்குறைக்கு உணவுமோசடியே காரணம்!

(கொழும்பு)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உணவுப் பற்றுக்குறை ஏற்படுவதற்கு புனர்வாழ்வு அமைச்சில் இடம்பெற்ற பல கோடிரூபா மோசடிகள் ஒரு காரணம் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் பற்றி விரிவான அறிக்கை ஒன்று குற்றப் புலனாய்வுத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதென்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை யாழ் குடாநாட்டுக்குத்தேவையான உணவுப் பொருள்கள் புனர்வாழ்வு அமைச்சினால் அனுப்படுவதில்லை என்று பலகாலமாக குற்றம்சாட்டப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (சு)

## இந்தியராணுவத்தின் காலத்தில் வாய்க்காலில் புதைந்த சைக்கிள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

1989-ம் ஆண்டு இந்திய இராணுவம் யாழ். நகர்மீது தாக்குதல் நடாத்தியபோது யாழ். வடிவாய்க்காலுக்குள் புதையுண்டு கிடந்த சைக்கிள் ஒன்று நேற்று கண்டெடுக்கப்பட்டது.

யாழ். போதனாவைத்தியசாலை பின்புறமுள்ள விக்டோறியா வீதிக்கும் பருத்தித்துறை வீதி சந்திக்கும் இடையிலுள்ள பகுதியில்

(4-ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### பாகற்காய் குளிகை

சலரோக நோயைக் கட்டுப் படுத்தக்கூடிய Karawilla Capsules, கிடைக்குமிடம்: எஸ். ரி. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-7053)

### அறிவுக் களஞ்சியம்

அறிவுக் களஞ்சியம் - 7-வது இதழ் 12 1-93ல் வெளியாகும் வாசகர்களின் - முக்கிய மாக உயர் வகுப்பு மாணவர்களின் பொது அறிவை வளர்ப்பதை நோக்காகக் கொண்டு, இலாப நோக்கின்றி வெளிவருகிறது. பிரதி ரூபா 10/- மட்டுமே. (ஏ-2763)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலைகாலனியல், சரும நோய்கள், யாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணம். (சி-7119)

### புலமைப் பரிசில் வகுப்புகள் (ஆண்டு 5)

அகில இலங்கையிலே சிறந்த பெறுபேற்றை வருடாவருடம் பெற்றுத்தரும் நிறுவனத்தால் தூரஇட மாணவரின் வசதி கருதி சனி, ஞாயிறு நாட்களில் பி. ப. 4-00 — 6-00 வகுப்புகள் நடைபெறவுள்ளன வகுப்புகள் ஆரம்பம் 9-01-93 சனி பி. ப 4-00 மணி. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-7125)


## விவசாயபீட உற்பத்தி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி விவசாயபீடம் பால், நெய், யோகட், கோழிக் குஞ்சுகள், முட்டை, அரோட்டுமா, என்பவற்றை விநியோகித்து வருகின்றது. (159)

## வீதி விளக்குகள்

(அரியாலை)

யாழ். ஆஸ்பத்திரி வீதி யாழ் மடம் வீதியிலுள்ள சில வர்த்தக நிலையங்கள் தமது கடைகளுக்கு முன்பாக வீதி விளக்குகளை ஏற்றியுள்ளனர். (59)

## சுற்றிவளைப்பில் 10பேர் கைது

(கொழும்பு)

மண்டூரில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட படையினரின் சுற்றிவளைப்பின்போது கைது செய்யப்பட்டோரில் பத்துப்பேர் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (61)

## மருந்துகள் பெறஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்திய சாலையில் தற்போது ஏற்பட்டிருக்கும் மருந்துத்தட்டுப்பாட்டினை நீக்குவதற்காகவும் யாழ் வைத்தியசாலைக்கு தேவையானவற்றை தருவிக்குமுகமாகவும் வைத்தியசாலையிலிருந்து இரு உயரதிகாரிகள் நேற்று முன்தினம் விமான மூலம் கொழும்பு சென்றுள்ளனர். (56)

## மீளாய்வு

(தாளையடி)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குள் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோர் தொழுநோய், காசநோய் உதவிப் பணம் பெறுவோர் பற்றிய குடும்ப நிலைமையை மீளாய்வு செய்யும் பணியில் உதவி அரச அதிபர், சமூகசேவை உத்தியோகத்தர், அவ்வப்பகுதி கிராமசேவை அலுவலர்கள் ஆகியோர் ஈடுபட்டுள்ளனர். (163)

## பாலுக்கு தட்டுப்பாடு

(அரியாலை)

யாழ். கூட்டுறவுப்பண்ணையில் சகல பால்சாலைகளுக்கும் அனுப்பப்படும் பால் உடனடியாக முடிந்து விடுவதனால் பாலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

யாழ். பிரதம தபால் நிலையத்திற்கு அருகாமையிலுள்ள பால்சாலையில் அதிகாலையில் மக்கள் பாலுக்காக வரிசையில் நிற்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. (59)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயண கிராம அபிவிருத்திச்சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் அண்மை நடைபெற்றது.

தலைவராக கே. இராசரட்னமும் செயலாளராக செல்வன செ. லிங்கராசாவும் பொருளாளர் சு. நற்குணசீலனும் 11 அங்கத்தவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (56)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1993 ஜனவரி 29-ம்திகதி வரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

பதவிகள்

(அ) சதுரங்க ஆட்ட/ தற்காப்பு/ உதைபந்தாட்ட இடைவரவுப் போதனாசிரியர்

(ஆ) கிளிநொச்சி விவசாயபீடம் - இடைவரவு உடற்கல்விப் போதனாசிரியர்

கொடுப்பனவு விகிதம்

மணித்தியாலம் ஒன்றுக்கு 75/- ரூபா (மாதமொன்றுக்கான உச்ச அளவு 900/- ரூபா)

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களையும் விபரங்களையும் நிதிக்கிளையில் 20/- ரூபாவைச்செலுத்தி இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளையின் சிரேட்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில்பெற்றுக்கொள்ளவேண்டும். தபால்மூலம் படிவங்களையும், விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் / நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/-ரூபா பெறுமதியான காசுக்கட்டளை / தபாற் கட்டளையுடன் 23 X 10 ச. மீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் / திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் நியதிச் சட்டசபைகளிலிருந்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

விதிக்கப்பட்ட படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992-12-29.
(ஏ-2770)



நீராவியடி
மகளிர் பணியக நிதிஉதவிக்காக
செல்வி குஞ்சலா நாகராஜ ஐயரின்
★ இசைமாலை ★
இலங்கை வேந்தன் குழுவினரின்
★ கதகளி பரதநாட்டியம் ★
புலவர் முத்து இராசரெத்தினத்தின்
'இலங்கை வேந்தன்'
(இசை நடன நாடகம்)
இடம்: யாழ். இந்து குமாரசாமி



சைவ வித்தியா விருத்திச் சங்கம்
பொதுமுகாமையாளர் பதவிக்கான


யாழ். மாவட்ட

# புனர்வாழ்வுப் பணிக்கு ஜேர்மன் அரசு உதவி

(நல்லூர்)

யாழ். மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்துள்ள மக்களின் புனர்வாழ்வுப் பணிக்கென 113 மில்லியன் ரூபாவை வழங்க ஜெர்மன் குடியரசு முன்வந்திருக்கின்றது.

யாழ் மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கையின் நிமித்தம் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த மக்களின் நிலமைகளையும் அவர்களுக்கு அளிக்கக்கூடிய புனர்வாழ்வு பணிகளையும் அனுப்பிவைக்குமாறு யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்திடம் ஜேர்மன் அரசு கோரியிருந்தது.

இதற்கமைய யாழ். அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம், செயலக புனர்வாழ்வுப் பிரிவுடன் இணைந்து இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரணப்பணித் திட்டமொன்றினைத் தயாரித்து அனுப்பி வைத்திருக்கிறது. இப்புனர்வாழ்வு நிவாரணத் திட்டத்தை ஏற்றுக் கொண்டே ஜேர்மன் அரசு மேற்படி தொகையை ஒதுக்கியுள்ளது.

இவ்நிதி ஒதுக்கப்படவுள்ள விடயங்களுக்கேற்ப அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினரால் செலவிடப்படவிருக்கின்றது எனவும் தெரிய வருகிறது -158

## 1 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு

(கொழும்பு)

இவ்வாண்டு சுமார் ஒரு லட்சம் பேர் வரையில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை பெறவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது

தாதிமார், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் பொது வேலைப்பிரிவினர் ஆகியோர் இவவேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளவுள்ளதாகவும் பணியகம் மேலும் தெரிவித்துள்ளது. - க

## கண்டெடுக்கப்பட்ட காசோலை

(யாழ்ப்பாணம்)

திருமதி சு. யோகராணி என்பவருடைய இலங்கை வங்கி காசோலை மானிப்பாய் வீதியில் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சியுடன் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

## புதிய ஆயர் நாளை தெரிவு

(யாழ்ப்பாணம்)

தென்னிந்திய திருச்சபையின் யாழ். மறைமாவட்ட புதிய ஆயர் தெரிவு நாளை 9ம் திகதி சனிக்கிழமை காலை9-30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெறவிருக்கின்றது.

யாழ் மறைமாவட்ட ஆயராகக் கடமையாற்றும் பிஷப் அதிவண. பி ஜே அம்பலவாணர் அடுத்தமாதம் பெப்ரவரியில் ஓய்வுபெற இருப்பலதயொட்டியே மேற்படி ஆயர் தெரிவு இடம்பெறவுள்ளது. - க


## தமிழக ஆளுநர் விரைவில் ராஜினாமா

(சென்னை)

தமிழக ஆளுநர் பிஷ்மா நாராயணசிங் விரைவில் தமது பதவியை ராஜினாமாச் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழகத்தில் தற்போது தோன்றியுள்ள நிலைமையை அடுத்தே ஆளுநர் தமது பதவியை ராஜினாமாச் செய்யவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. - க


31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும



21ம் ஆண்டு நினைவஞ்சலி



வர். சில ... களையும் ஒணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணம். (சி-7119)

## புலமைப் பரிசில் வகுப்புகள் (ஆண்டு 5)

அசில இலங்கையிலே சிறந்த பெறுபேற்றை வருடாவருடம் பெற்றுத்தரும் நிறுவனத் தால் தூரஇட மாணவரின் வசதி கருதி சனி, ஞாயிறு நாட்களில் பி. ப. 4-00 — 6-00 வகுப்புகள் நடைபெற வுள்ளன வகுப்புகள் ஆரம்பம் 9-01-93 சனி பி. ப 4-00 மணி. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-7125)

## விவசாயபீட உற்பத்தி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி விவசாயபீடம் பால், நெய், போகட், கோழிக்குஞ்சுகள், முட்டை, அரோட்டுமா என்பவற்றை விநியோகித்து வருகின்றது. (159)

## மீளாய்வு

(தாவடி)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குள் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோர் தொழுநோய், காசநோய் உதவிப் பணம் பெறுவோர் பற்றிய குடும்ப நிலைமையை மீளாய்வு செய்யும் பணியில் உதவி அரச அதிபர், சமூகசேவை உத்தியோகத்தர், அவ்வப்பகுதி கிராமச்சேவை அலுவலர்கள் ஆகியோர் ஈடுபட்டுள்ளனர். (163)

## பாலுக்கு தட்டுப்பாடு

(அரியாலை)

யாழ். கூட்டுறவுப்பண்ணையில் சகல பால்சாலைகளுக்கும் அனுப்பப்படும் பால் உடனடியாக முடிந்து விடுவதனால் பாலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

யாழ். பிரதம தபால் நிலையத்திற்கு அருகாமையிலுள்ள பாலசாலையில் அதிகாலையில் மக்கள் பாலுக்காக வரிசையில் நிற்பதைக் காணக்கூடியதாக வுள்ளது. (59)

சைவ வித்தியா விருத்திச் சங்கம்

## பொதுமுகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்

17-01-93க்கு முன் சுயவிபரங்களைக் குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு விரும்புவோர் பதிவுத் தபாலில் விண்ணப்பிக்கவும்.

கௌரவ செயலாளர்.

சைவ வித்தியா விருத்திச்சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி. (எ-2768)

இளங்கலைஞர் மன்ற கலா மண்டப

## திறப்பு விழாவும் "ராக பாவம்" நிதியுதவி நிகழ்ச்சியும்

இடம்: மன்ற கலாமண்டபம்
சட்டநாதர் வீதி, நல்லூர்.

காலம்:
06-02-1993 — 08-02-1993

நுழைவுச்சீட்டு:
நாளொன்றுக்கு 500/- 250/-

பொன். சுந்தரலிங்கம்,
தலைவர்.

அன்பளிப்பு:
ஹரன் வர்த்தக ஸ்தாபனம்,
772, தட்டாதெரு சந்தி,
யாழ்ப்பாணம். (எ-2769)

(அ) சதுரங்க ஆட்ட/ தற்காப்பு/ உதைபந்தாட்ட இடைவரவுப் போதனாசிரியர்

(ஆ) கிளிநொச்சி விவசாயபீடம் - இடைவரவு உடற்கல்விப் போதனாசிரியர்

அனுப்பப்படும் விண்ணப்பங்கள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

விதிக்கப்பட்ட படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

**கொடுப்பனவு விகிதம்**

மணித்தியாலம் ஒன்றுக்கு 75/- ரூபா (மாதமொன்றுக்கான உச்ச அளவு 900/- ரூபா)

**பதிவாளர்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992-12-29. (ஏ-2770)

நீராவியடி

## மகளிர் பணியக நிதிஉதவிக்காக

செல்வி குஞ்சலா நாகராஜ ஐயரின்

★ இசைமாலை ★

இலங்கை வேந்தன் குழுவினரின்

★ கதகளி பரதநாட்டியம் ★

புலவர் முத்து இராசரெத்தினத்தின்

## 'இலங்கை வேந்தன்'

(இசை நடன நாடகம்)

இடம்: யாழ். இந்து குமாரசாமி மண்டபம்

காலம்: 10-01-93 பிற்பகல் 2-30 மணி



இலங்கை வேந்தனின் நடனத் தோற்றம்.

தலைவர்: திருமதி ந. கோமளாதேவி
செயலாளர்: செல்வி ப. பகீரதி

அன்பளிப்பு:
தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்
நியூ லலிதா ஜுவல்லர்ஸ்,
74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-7103)

நாட்டு வேலைவாய்ப்புக்களை பெறவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது

தாதிமார், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் பொது வேலைப்பிரிவினர் ஆகியோர் இவ்வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளவுள்ளதாகவும் பணியகம் மேலும் தெரிவித்துள்ளது. - க

## கண்டெடுக்கப்பட்ட காசோலை

(யாழ்ப்பாணம்)

திருமதி சு. யோகராணி என்பவருடைய இலங்கை வங்கி காசோலை மானிப்பாய் வீதியில் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சியுடன் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

வானர் அடுத்தமாதம் பெப்ரவரியில் ஓய்வுபெற இருப்பதையொட்டியே மேற்படி ஆயர் தெரிவு இடம்பெறவுள்ளது. - க

## தமிழக ஆளுநர் விரைவில ராஜினமா

(சென்னை)

தமிழக ஆளுநர் பீஷ்மர் நாராயணசிங் விரைவில் தமது பதவியை ராஜினமாச் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழகத்தில் தற்போது தோன்றியுள்ள நிலைமையை அடுத்தே ஆளுநர் தமது பதவியை ராஜினமாச் செய்யவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. - க

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்



சூசை அருளப்பு
தோற்றம்: 01-06-1902
மறைவு: 08-12-1992

## 21ம் ஆண்டு நினைவஞ்சலி



அருளப்பு மாகிறேற் அன்னம்மா
தோற்றம்: 14-05-1914
மறைவு: 11-10-1971

ஆண்டவருக்கு அஞ்சி நடப்பவன் தன் இறுதிக் காலத்தில் பேறுபெற்றவனுவான். மரண நாளிலும் ஆசீர்வதிக்கப்படுவான். (சீராக் ஆதி (1அதி 13வச.)

இரக்கமுள்ள எம் தந்தையே உமது விசுவாசத்தில் வாழ்ந்து மரித்த அடியார்கள் திரு. சூசை அருளப்பு. திருமதி அருளப்பு மாகிறேற்றுக்கும் நீதியின் கிரீடத்தை உமது பரிசாக அளித்திட அனைவரும் வேண்டுகிறோம். இவர்களின் ஆன்ம சாந்திக்காக பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் (08-01-1993) வெள்ளிக்கிழமை காலை 6-15 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

(எமது தந்தையாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறுகிறோம்.)

மகன்மார்:
அருளப்பு ஸ்ரனிஸ்லோஸ்,
அருளப்பு தோமஸ்.

859/3, கோயில் ஒழுங்கை,
பாஷையூர். (எ-2772)

### காஷ்மீரில் பெருந் தீ விபத்து

# 37 பேர் தீயில் கருகினர் 100 வீடுகள், வாகனம் சேதம்

(புதுடில்லி)

காஷ்மீர் பகுதியின் சோப்பூர் என்னும் இடத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட பெரும் தீவிபத்தில் 37 பேர் தீயில் கருகி மாண்டனர். நூற்றுக்கு மேற்பட்ட கடைகள் எரிந்து நாசமாகியுள்ளன. 4 வாகனங்கள் எரிக்கப்பட்டுள்ளன.

முஸ்லிம் தீவிரவாதிகள் சில வீடுகளில் வெடி மருந்துகளை வைத்திருந்ததனாலேயே இவ் விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் இதனையடுத்து படையினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் நீண்ட நேரமாக துப்பாக்கிச்சமர் இடம்பெற்றதாகவும் இதன்போது இரு பாதுகாப்புப் படையினர் படுகாயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த படையினரின் ஆயுதங்களையும் தீவிரவாதிகள் எடுத்துச் சென்றுவிட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

பதற்ற நிலைமை தொடர்வதனையடுத்து உடனடி நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு மாநில ஆளுநர் கிரிஷ் சந்திர சக்சேனாவை பிரதமர் நரசிம்மராவ் பணித்துள்ளார். -அ

### பங்கீட்டு முறையில் அரிசி மா விநியோகம்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 21 கிளைகளிலும் பங்கீட்டுமுறையில் அரிசி, மா வழங்கப்படுகிறது.

அட்டைக்கு ஒரு கிலோ வெள்ளைப்பச்சை அரிசியும், இரண்டு கிலோ மாவும் இவ் வாரம் தொடக்கம் வழங்கப்பட்டுவருகின்றது.

தற்போதைய உணவுப் பொருள் தட்டுப்பாட்டின் காரணமாகவே கையிருப்பில் இருக்கும் அரிசி, மா ஆகியன பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்பட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது. (72)

### வருமானம்: 150 கோடி ரூபா

(திருப்பதி)

சென்ற ஆண்டு திருப்பதி தேவஸ்தானத்தின் வருமானம் 150 கோடி ரூபாவாக உயர்ந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எழுபதாம் ஆண்டு வருட வருமானம் முப்பது லட்சமாக இருந்தது. தற்போது இத்தொகை இந்தளவிற்கு உயர்ந்துள்ளது. கடந்தாண்டு ஒரே நாளில் 50 ஆயிரம் பேர் நேர்த்திக்காக முடிவெட்டிய அவர்களது முடி இரண்டு கோடி ரூபாய்க்கு ஏலம்போயிருந்தது. உலகில் வருமானம் கூடிய அறநிலையங்களில் திருப்பதி தேவஸ்தானமும் ஒன்றென அதிகாரிகள் தெரிவித்தனர். (எஸ்

### விடுதலைப்புலிகள் குறித்த இ. காங்கிரஸ் கருத்துக்கு தமிழக அமைச்சர் மறுப்பு

(சென்னை)

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பித்திருப்பதாக தமிழக இந்திரா காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்கள் கூறிவருவதை தமிழ்நாடு நிதி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் முற்றாக மறுத்துள்ளார்.

சென்னையில் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பொன்றில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழகத்தில் சட்டம், ஒழுங்கைப் பேணும்வகையில் தமிழக அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் விடுதலைப்புலிகள்தொடர்பாக தமிழக அரசு மேற்கொண்டுவரும் அணுகுமுறைகள் குறித்தும் மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவானும், இணையமைச்சர் எம். எம். ஜேக்கப்பும் திருப்தி வெளியிட்ட பின்பு தமிழக இந்திரா காங்கிரஸ் கட்சியினரின் மேற்படி அறிவிப்பு வியப்புக்குரியது என்றார். – அ

### உள்ளூராட்சி ஒய்வூதியர் வவுச்சர்கள் தாமதம்

(யாழ்ப்பாணம்)

கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களுக்கான உள்ளூராட்சி ஒய்வூதியர்களின் வவுச்சர்கள் இதுவரை வடபகுதிக்கு வந்துசேரவில்லை. 93 ஜனவரிக்கான வவுச்சர்களும் தாமதப்படலாம் எனத் தெரிய வருகிறது.

தபால் விநியோகம் தாமதமே இதற்குக் காரணம் என்று வடமாநில ஒய்வூதியர் சங்கங்களின் சம்மேளனம் ஜனாதிபதிக்கு இதுபற்றி எழுதியுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளது. அத்துடன் யாழ். அரசாங்க அதிபரையும் இதுபற்றி சந்தித்து ஜனவரி வவுச்சர்களை ஏனைய வவுச்சர்களுடன் பெற்றுத் தருமாறு சம்மேளனப் பிரதிநிதிகள் கோரியுள்ளனர் என அறியப்படுகிறது.

### குடியிருப்பு பகுதிகள் மீது ஷெல் தாக்கு

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவமுகாமிலிருந்து வலிவடக்குப் பகுதிகளான ஏழாலை, தெல்லிப்பளை, குப்பிளான், கட்டுவன் பகுதிகளை நோக்கி நேற்று முன்தினம் இரவு நேரங்களில் படையினர் தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல்களையும் மற்றும் துப்பாக்கிப் பிரயோகங்களையும் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினமிரவு 9 மணி தொடக்கம் விளான், ஏழாலைப் பகுதிகளை நோக்கி கடும் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல்களை படையினர் நடத்தினர்.

நள்ளிரவுக்குப் பின்னரும் தொடர்ச்சியாக தாக்குதல்களை நடத்தினர்.

கடந்த திங்கள் இரவும் படையினர் இத்தாக்குதல்களை மேற்கொண்டனர். இதனால் இரவு நேரத்தில் ஏழாலைப்பகுதி மக்கள் மிக அச்சத்துடன் பொழுதைக் கழித்து வருகின்றனர். ரி-56]

### பாகிஸ்தானிலிருந்து 10 வைத்திய நிபுணர்கள்

(கொழும்பு)

பாகிஸ்தானிலிருந்து பத்து வைத்திய நிபுணர்கள் இம் மாதம் முடிவதற்கிடையில் வரவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் பயிற்சி பெற்ற வைத்திய நிபுணர்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டதையடுத்தே மேற்படி வைத்திய நிபுணர்கள் பாகிஸ்தானிலிருந்து வரவழைக்கப்படவுள்ளதாகவும் மேலும் 500 வைத்திய நிபுணர்கள் அவசியம் தேவை என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வைத்திய நிபுணர்கள் நாட்டின் பல பகுதிகளில் சேவையாற்றவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

### வடக்கு-கிழக்கு புனர்வாழ்வு வேலைகளுக்கு புதிய வாகனம் அன்பளிப்பு

(கொழும்பு)

அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் ஹெவார்ட் டெபென்ஹாம் 35 லட்சம் ரூபா பெறுமதியான வாகனமொன்றை புனர்வாழ்வு- புனரமைப்பு அமைச்சிடம் நேற்று கொழும்பில் கையளித்துள்ளார்.

இந்த வாகனம் வடக்கு-கிழக்குப் பகுதியின் புனர்வாழ்வு வேலைகளுக்கே பயன்படுத்தப்பட வேண்டுமென்றும் அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் புனர்வாழ்வு அமைச்சின் அதிகாரிகளிடம் வலியுறுத்தியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

### இன்று

(உடுவில்)

யாழ்ப்பாணம், வேலணைக் கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளின் ஆங்கில பாட இணைப்பாளர்களுக்கான கருத்தரங்கொன்று இன்று 8ம் திகதி வெள்ளிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். -109

### அட்டைகள் மீளாய்வு

(அரியாலை)

தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்து அரியாலை நாவற்குழி - யாழ்ப்பாணம் நாயாந்துறை ஆகிய இடங்களிலுள்ளவர்களின் (இ) உலர் உணவு அட்டைகள் மீளாய்வு செய்யப்பட்டு வருகிறது. (59)

### வீதி விபத்தில் இளைஞன் பலி

(பண்டத்தரிப்பு)

வடலியடைப்பை சேர்ந்த துரையப்பா யோகேஸ்வரன் என்ற இளைஞர் மேற்கு ஜேர்மனியில் இடம்பெற்ற வீதி விபத்து ஒன்றில் சிக்கி பலியானார் என்று அறியப்படுகிறது. (72)

### ஜனாதிபதி தேர்தல் அறிக்கை வெளிவரும்

(கொழும்பு)

1988 – ம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் பற்றிய முழு அறிக்கை ஒன்று அடுத்தவாரம் வெளியிடப்படவுள்ளது.

மேற்படி தேர்தலில் ஜனாதிபதியாக திரு. பிரேமதாஸா தெரிவு செய்யப்பட்டது சட்டத்துக்கு முரணானது என அவருடன் போட்டியிட்ட எதிர்க்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தாக்கல் செய்த வழக்கு சென்ற ஆண்டு உயர் நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது தெரிந்ததே.

இத்தேர்தல் சம்பந்தமான முழு அறிக்கை ஒன்று அடுத்த வாரம் கொழும்பில் வெளியிடப்படுமென்று தேர்தல் அதிகாரி திரு. சந்திரானந்த டி சில்வா கொழும்பில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (வி)

### குமாரி கப்பலில் உணவுப் பொருட்கள் அனுப்ப ஏற்பாடு

(நல்லூர்)

சேவையிலிருந்து இடைநிறுத்தப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்ட குமாரி கப்பல் மூலம் யாழ். மாவட்டத்திற்கான அத்தியாவசியப் உணவுப் பொருட்கள் எடுத்து வரப்படஉள்ளது.

கொழும்புத் துறைமுகத்தில் குமாரி கப்பல் உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டிருப்பதாகவும், இன்னும் இரண்டு வார காலத்திற்குள் பருத்தித்துறைத் துறைமுகத்துக்கு குமாரி வந்து சேரும் எனவும் யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன் யாழ். மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடியை தடுக்கும் முகமாக 3000 மெற்றிக்தொன் மாவை திருகோணமலையிலிருந்து 'குமண' மூலம் எடுத்து வரும்படி யாழ் புனர்வாழ்வுப் பிரிவு அவசரமாக அத்தியாவசிய ஆணையாளருக்கு அறிவித்துள்ளது. (158)

### திட்டப் பணிப்பாளர்கள் யாழ். செயலகத்தில் கடமையாற்ற பணிப்பு

(நல்லூர்)

புதிதாக நியமனம்பெற்ற திட்டப் பணிப்பாளர்களின் யாழ்.மாவட்டத்திலிருந்துபிற மாவட்டங்களுக்கு நியமிக்கப்பட்டவர்கள் மறு அறிவித்தல் வரும்வரை யாழ் அரச செயலகத்திலேயே கடமைக்கு சமூகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களுக்கான அவசர அறிவித்தலை கொழும்பில் தங்கியிருக்கும்யாழ். அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் வெளியிட்டுள்ளார்.

யாழ். மாவட்டத்திலிருந்து பிற மாவட்டங்களுக்கு செல்வதற்கு போக்குவரத்து நிலைமைகள் சீரில்லாததனாலேயே மேற்படி அறிவித்தலை வெளியிட்டு உள்ளதாக அறியவருகிறது.

மறுஅறிவித்தல் கிடைக்கும் வரை நியமிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு செல்லவேண்டாம் எனவும் தொடர்ந்து மீள் அறிவித்தல் கிடைக்கும்வரை செயலகத்தில் கடமைகளை தொடருமாறும் கேட்கப்பட்டுள்ளனர். (158)

### இடம்பெயர்ந்தவர்களுக்கு 100 குடிசைகள் அமைக்க ஏற்பாடு

(உடுவில்)

வலிகாமம் தெற்கு உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இடம்பெயர்ந்த மக்களுக்காக நூறு குடிசைகளை அமைத்துக் கொடுக்க யாழ்ப்பாண மாவட்ட சர்வோதய இயக்கத்தினர் முன்வந்துள்ளனர்.

உடுவில் மல்வம் பகுதியில் சுமார் எண்பது குடிசைகள் இதுவரை அமைக்கப்பட்டுள்ளன. மீதி குடிசைகளும் அமைக்கப்பட்டதும இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு அவை கையளிக்கப்படும்.

இக்குடிசைகள் யாவும் உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பாடசாலைகளில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படஉள்ளதாகத் தெரியவருகின்றது. -109

### போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு நியமனம் வழங்கப்படும்

(நல்லூர்)

யாழ்.மாவட்ட அரசதிணைக்களங்களில் எழுதுனர்பதவிக்கு ஏற்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் மேலும்ஒரு தொகுதியினருக்கு நியமனங்கள் வழங்கப்படவுள்ளது.

போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களுள் 75 வீதமானோரே இதுவரைகாலமும் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் மேலும் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுள் 15 வீதமானோரை நியமிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாம்.

யாழ். அரச அதிபர் எடுத்த முயற்சியின் பலனாகவே இவர்களை நியமிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்களுக்கான நியமனங்கள் கொழும்பிலிருந்து அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் திரும்பியதும் வழங்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. (158)

# யாழ். மாநகர அபிவிருத்திக்கு ஒரு கோடி 50 லட்சம் ரூபா இவ்வருடம் செலவிடப்படும்

(நல்லூர்)

யாழ். மாநகரசபை இவ்வருடத்தில் யாழ். நகர அபிவிருத்திக்கென ஒருகோடி 50 லட்சம் ரூபாவை செலவிடவிருக்கின்றது. இவ் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நீர்வழங்கல், வடிகால்கள், வீதிகள் ஆகிவற்றை சீர்செய்தல் யாழ் நகர மத்தியில் நவீன மலசல கூடம் அமைத்தல் போன்ற திட்டங்களுடன் மாநகரசபை நூல் நிலையங்களுக்கென புதிய நூல்களும் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

இத்திட்டங்களை மேற்கொள்வதற்கென 'யூனிசெவ்' அமைப்பிடமிருந்து 70 லட்சம் ரூபாவை தாம் எதிர்பார்ப்பதாகவும் மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வருடம் யாழ்.மாநகர சபைக்கென பத்து லட்சம் ரூபா மட்டுமே ஒதுக்கப்பட்டதாகவும் கண்டி மாநகர சபைக்கு ஆறு கோடி ரூபா ஒதுக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது. —158

# கொழும்பு செல்லும் நோயாளர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை டாக்டர்களினால் கொழும்பு வைத்தியசாலை சென்று மேலதிக சிகிச்சை பெறுவதற்கு சிபாரிசு செய்யப்பட்ட நோயாளர்கள் தம்மை பதிவு செய்வதற்கு எதிர்வரும் 11ம் திகதி, 12ம் திகதி திங்கள் செவ்வாய் ஆகிய நாட்களில் காலை 8 மணிக்கு வைத்தியசாலை பணிப்பாளர் காரியாலயத்தில் சமுகம் கொடுக்கும்படி பணிப்பாளர் செல்வி நவமலர் கனகரட்ணம் தெரிவித்துள்ளார்.

ஏராளமான நோயாளர் சிபாரிசு செய்யப்பட்டுள்ளதால் நோயாளர்களும் அவர்களை அழைத்துச் செல்லும் உதவியாளர்களும் கட்டாயமாக நேரடியாக சமுகம் கொடுக்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நோயாளர்கள் வைத்திய அத்தாட்சி அறிக்கை, அடையாள அட்டை ஆகியனவற்றை கூடவரும் போதும் கொண்டுவரும்படியும் கேட்கப்பட்டுள்ளனர். (56)

## ஆங்கில ஆசிரியர்க்கு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ஆங்கில ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணக் கோட்டத்துக்கும் வேலணை கோட்டத்துக்கும் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

நாளை 10ம் திகதி இராமநாதன் கல்லூரியில் மருதனார்மடக் கோட்டத்துக்கும் 12-ம் திகதி சாவகச்சேரி பெண்கள் கல்லூரியில் சாவகச்சேரி கோட்டத்திலும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

ஒவ்வொரு கோட்டங்களையும் சேர்ந்த பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் உட்பட சகல ஆங்கில ஆசிரியர்களும் கருத்தரங்கில் பங்குபற்றுமாறு யாழ் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (இ—158)

## பொது எழுது

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாகச் செயலக உயரதிகாரிகள் தெரிவிக்கின்றனர்கள்.

இடமாற்றம் செய்யப்பட்டவர்களுக்கு இதனைத் தெரிவித்து யாழ்.மாவட்டப் பிரதி ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார். [151-158]

# கோப்பாய் உ, அ. அ. பிரிவில் வாழைக்கு நஷ்டஈடு 16ம் திகதி வழங்கப்படும்

(நல்லூர்)

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடந்த வருடம் ஏற்பட்ட வாழை பயிர்ச்செய்கை அழிவுக்கான நஷ்டஈடு எதிர்வரும் 16 ம் திகதி வழங்கப்படவிருக்கிறது.

இந்த நஷ்டஈடு 2300 க்கு மேற்பட்டோருக்கு வழங்கப்படவுள்ளதாகவும் நஷ்டஈடாக 300 ரூபா முதல் 5000 ரூபாவரை வழங்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது. (இ 158)

# கிளாலி சம்பவத்தில் பலியானவரின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)

கடந்த சனிக்கிழமை கிளாலிக் கடலில் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பலியான நடுத்தர வயதுடைய ஒருவரின் சடலம் கடந்த செவ்வாய் இரவு தமிழீழ காவல்துறையினரால் கண்டெடுக்கப்பட்டு உறவினரிடம் ஒப்படைக்க முடியாத நிலையில் அடையாளம் காண்பதற்காக யாழ். வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

நேற்று வரையில் சடலம் யாருடையது என உறவினர்கள் அடையாளம் காட்டப்படவில்லை.

சடலம் உருக்குலைந்த நிலையில் உள்ளபடியினால் ஓரிரு நாட்களில் வைத்தியசாலையினரால் அடக்கம் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (56)

## மீட்புநிதி சேகரிப்புதிருத்தம்

(யாழ்ப்பாணம்)

நேற்று எமது இதழில் மீட்புநிதிசேகரிப்பு தொடர்பாக வெளிவந்த செய்தியில் 9-ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் 10-00 மணி வரை மீட்புநிதி செலுத்தலாமென தவறுதலாக பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அன்றையதினம் மாலை 3 மணிமுதல் 3-30 மணி வரையும் மீட்புநிதி செலுத்தலாம் என்பதே சரியானது எனசுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## விசேட கூட்டம்

(அரியாலை)

குருநகர் கடற்கரை வீதி புனித செபஸ்தியார் ஆலய வருடாந்த திருவிழா பற்றிய விசேட கூட்டம் இன்று 08ந் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு புனித செபஸ்தியார் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது. (59)

# கட்சி அமைப்பாளர்களுக்கு சிறிமாவோ அவசர அழைப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைவர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கட்சியின் சகல அமைப்பாளர்களையும் அவசர அவசரமாக சந்திக்க ஏற்பாடு செய்ததாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு டாலி வீதியில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமைக் காரியாலயத்தில் இக்கூட்டம் நேற்று முன்தினம் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாம்.

விசேட தந்திகளை அனுப்பி கட்சி அமைப்பாளர்களை திருமதி பண்டாரநாயக்கா அழைத்திருந்ததாகவும் வழமையாக கட்சியின் காரியதரிசியே கூட்டத்துக்கு அழைப்பு அனுப்பியதாகவும் ஆனால் வழமைக்கு மாறாக திருமதி பண்டாரநாயக்கா அழைப்புஅனுப்பியமைதமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் அமைப்பாளர்கள் வியப்பு வெளியிட்டுள்ளனர். (க)

## ஜனாதிபதி இந்தியா விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி ஆர். பிரேமதாசா எதிர்வரும் 15 ந் திகதி இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார். அங்கு அவர் மூன்று நாட்கள் தங்கியிருப்பார்.

இந்தியாவில் தங்கியிருக்கும் காலத்தில் புத்தகயா, வரணாசி, சிராவஸ்தி ஆகிய இடங்களுக்குச் செல்லவுள்ளார்.

டாக்காவில் நடைபெறும் 'சார்க்' உச்சி மகாநாட்டில் கலந்துகொண்ட பின்பு இலங்கைத் திரும்பும் வழியிலேயே அவர் இந்தியா செல்வார். (சு)

## இலங்கை நிர்வாக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 23ம், 30ந் திகதிகளில் இப்பரீட்சைகள் கொழும்பில் நடைபெறவிருப்பதாக உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன. யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பரீட்சார்த்திகள் கொழும்புக்குச் சென்று இப்பரீட்சை எழுதுவதால் ஏற்படக்கூடிய போக்குவரத்துப் பிரச்னைகள் காரணமாகவே இதனை இங்கு வைக்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (161)

## பட்டதாரி

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்பட்டதாகவும் கல்வியமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை வவுனியா மாவட்டத்தில் 450 பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

# இரு குளங்கள் நீச்சல் தடாகமாக மாற்றப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபைக்குட்பட்ட இரு குளங்களை புனரமைத்து அவற்றை நீச்சல் தடாகமாக மாற்ற யாழ். மாநகரசபை ஆணையாளர் பொ. பாலசிங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

நல்லூர் பண்டாரக்குளம், பாஷையூர் மக்கிக்குளம் ஆகிய இரண்டு குளங்களுமே இவ் வருடத்திற்கென ஒதுக்கப்பட்ட வரவுசெலவுத்திட்ட நிதியிலிருந்து புனரமைப்பு செய்யப்படவிருக்கிறது. (56)

## இல. அகதிகள் நாடு திரும்புவர்

(சென்னை)

தமிழ் நாட்டில் இருந்து இலங்கை அகதிகள் அடுத்த மாதமளவில் திரும்பி அனுப்பப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களில் செல்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்றும் கூறப்படுகிறது. - க

## மாதாந்தம் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழக் கல்வி மேம்பாட்டுச்சபையின் மாதாக் கூட்டம் எதிர்வரும் 10ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு. ப 10-00 மணிக்கு தமிழீழக் கல்விக்கழகப்பணிமனையில் நடைபெறவுள்ளது. இதில் சகலரையும் கலந்து கொள்ளும்படி மேற்படி சபையின் செயலாளர் கேட்டுள்ளார். - இ

## விரிவுரைத் தொடர்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புக்கள் அலகின் ஏற்பாட்டில் கைலாசபதி அரங்கில் இடம்பெற்று வரும் சைவசித்தாந்தம பற்றிய விரிவுரைத் தொடரின் இரண்டாம் அமர்வு நாளை 9-ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

பேராசிரியர் வி. சிவசாமி தலைமையில் நடைபெறவிருக்கும் மேற்படி விரிவுரைத் தொடரில் பல சிரேஷ்ட விரிவுரையாளர்கள் உரையாற்றவுள்ளனர். - வி

## இந்தியராணுவ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெரிய வடிவாய்க்காலை நேற்று யாழ். மாநகரசபை ஊழியர்கள் துப்பரவு செய்யும்போது மேற்படி சைக்கிள் கண்டெடுக்கப்பட்டது.

இச்சைக்கிளில் துப்பாக்கிச் சூட்டு அடையாளங்கள் பெருமளவில் காணப்படுவதுடன் பல வருடங்கள் நிலத்துக்கடியில் புதையுண்டு கிடந்ததினால் கரும் நிறமாகவும் காணப்படுகின்றது.

மேற்படி வடிவாய்க்காலுக்குள் இந்திய இராணுவம் பல பொதுமக்களை சுட்டும் பெருந்தொகையான சைக்கிள்களை தீயிட்டு எரித்தும் போட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-வி)

## சித்தன்கேணி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காணப்பட்டு பிரேத பரிசோதனையின்பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

தெல்லிப்பழையிலிருந்து இடம்பெயர்ந்து தற்போது சித்தன்கேணியில் வசித்துவந்தவரான கந்தையா வேலாயுதம் (47 வயது) காரைநகரிலிருந்து இடம்பெயர்ந்து சித்தன்கேணியில் தங்கியிருப்பவரான சின்னத்தம்பி அன்னம்மா (65 வயது), ச. லக்சுமிப்பிள்ளை (70 வயது). மூளாயைச் எஸ். சிவராசா (வயது 41) ஆகியோரே அடையாளம் காணப்பட்டவர்களாவார். (இ 56)

## கிளாலியின்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கடந்த சனிக்கிழமைகிளாலி கடலில் நடைபெற்ற கடற்படையினரின் தாக்குதல் சம்பவத்தையடுத்து ஆருபகுதிகளிலும் தேங்கியிருக்கும் பயணிகளின் தொகை அதிகரித்திருப்பதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ)

## உலகில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களிலும் அதிகரித்துக் காணப்பட்டன. தொடர்ந்தும் யுத்தங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

உலகில் 25 க்கும் மேற்பட்ட நாடுகளில் தற்பொழுது யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த யுத்தங்களினால் அதிகமாகப் பாதிக்கப்படுபவர்கள் சிறுவர்கள்தான் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ரி]

## கிளாலிச் சம்பவம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கும் பல்வேறு நாடுகளும் மனித உரிமைகள் இயக்கத்தின் நெருக்குதல்கள் காரணமாக ஸ்ரீலங்கா அரசு விடயத்தில் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படலாமெனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். -இ

## புக்காரா

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மேலும் ரஷ்யாவிடமிருந்து கொள்வனவு செய்த எம்.ஐ 8ரகத்தைச் சேர்ந்த 2 ஹெலிகொப்டர்கள் விரைவில் கொழும்பு வந்துசேர்ந்ததும் புக்காரா விமானங்களையும் சேர்த்து வடக்கு கிழக்குப் பகுதிகளில் பாரிய தாக்குதல் நடத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. -ரி

## இரு மாதங்களில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணிக்கை 11,000 என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை விடுதலைப்புலிகளிடமிருந்து வரும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள எமது படைபலத்தை நாம் பெருக்கி வருகிறோம் என்று இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

2-வது ஈழப்போர் ஆரம்பமானதையடுத்து கூடுதலான ஹெலிகொப்டர்கள், போக்குவரத்து விமானங்கள், டாங்கிகள், ஜெட் விமானங்கள். பீரங்கிப்படகுகள் என்பவற்றை இராணுவத்திற்காக நாம் வாங்கிருக்கிறோம் எனவும் அவ்வதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளார். (ரி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு ஜனவரி மாதம் 08-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Nnmber B/10336/B